கார் பார்க் செய்யப்படும் இடத்தை அண்டர் கிரவுண்ட் அடிப் படையிலே கீழே கார்களை நிறுத்துவதற்கு ஏதாவது வழிவகை செய்யப்பட்டிருக்கிறதா ? அப்படி செய்யப்படுமேயானால் இன் னும் அதிகமான இடம் கிடைக்கும் என்பதை அரசு அறியுமா ?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : தலைவரவர்களே, உருவாக இருக்கிற இந்தத் திட்டத்தில் வாகனங்களுக்காக 14 மீட்டர் பாதை அமைக்கப்படவும், மோட்டார் வண்டிகளை நிறுத்த வகையான இடத்திற்கும் வழிவகைகள் செய்யப்படும்.

திரு. அ. செல்வராசன் : தலைவரவர்களே, நடைபாதை மட்டும் அல்லாமல், வீதிகளிலும் கடைகள் அதிகமாக வந்து விட்டது. அவைகளை அகற்றி சரிப்படுத்த ஆலோசனை உள்ளதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : தலைவரவர்களே, நான் முதலிலேயே குறிப்பிட்டேன். அதை ஒழுங்குபடுத்தத்தான் மாநகராட்சி தனி அதிகாரியின் தலைமையில் குழு அமைந்திருக் கிறது.

திரு. செஞ்சி. ந. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, சென்னை நகரில் விபத்துக்கள் அதிகமாக நடப்பதால் நடைபாதைக் கோயில்களை அகற்றும் உத்தேசம் உண்டா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : அகற்றுகின்ற உத் தேசம் இல்லை, ஒழுங்குபடுத்துகின்ற உத்தேசம்தான் உண்டு.

கள்ளக்குறிச்சிக்கு குடிநீர் வழங்கல்.

* 292. வினா—திரு. துரை முத்துசாமி : மாண்புமிகு தொழி லாளர் நலத்துறை அமைச்சர்—கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தென்னாற்காடு மாவட்டம், கள்ளக்குறிச்சியில் குடி தண்ணீர் பற்றாக்குறை உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன்மீது அரசு எடுத்துக்கொண்ட நட வடிக்கை என்ன ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் :

(அ) ஆம்.

(ஆ) கள்ளக்குறிச்சி நகருக்கான குடிநீர்ப் பெருக்குத் திட் டம் ஒன்று தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் ஆய்வில் உள்ளது.

1978 பிப்ரவரி 27]

திரு. துரை முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இது எத்தனை நாளாக ஆய்வில் உள்ளது ? எத்தனை இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் செய்யப்பட்டிருக்கிறது ? எப்பொழுதுதான் அது முடிக்கப்படும் என்பதை அறிவிப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : தலைவரவர்களே, முதலிலே ஒரு திட்டத்தை 1968 இல் தீட்டினர்கள். அதன்படி 1996 ஆம் ஆண்டு 20,000 மக்கள் தொகை இருக்க வேண்டும். ஆனால் இப்பொழுதே 24,000 மக்கள் தொகை வந்துவிட்டது. ஆகையினல் மணிமுத்தாரிலிருந்து தண்ணீர் கொண்டுவர ஆய்வு நடந்துகொண்டிருக்கிறது. அதற்கு இன்வெஸ்டிகேஷன் சார்ஜ்—ஆய்வுத் தொகை—ரூபாய் 27,200. விரைவிலே ஆய்வை முடித்து மேற்கொண்டு காரியங்கள் செய்யப்படும்.

சின்ன சேலத்திற்கு குடிநீர் வழங்கல்.

* 293. வின—திரு. சின்னசேலம் மா. சுப்பிரமணியம் : மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர்—கீழ்க்கண்ட வினவுக்கு விடையளிப்பாரா—

கோமுகி அணைக்கட்டில் இருந்து சின்ன சேலம் பேரூராட்சிக்கு குடிதண்ணீர் கொண்டுவர அரசு முயற்சி ஏதேனும் எடுத்துள்ளதா ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : இல்லை.

திரு. சின்னசேலம் மா. சுப்பிரமணியன் : பேரவைத் தலைவரவர்களே, சின்ன சேலம் நகருக்கு நெடுநாட்களாகக் குடிநீர்ப் பஞ்சம் இருந்துகொண்டு வருகிறது. என்வே, கோமுகி அணைக் கட்டின் மேல் மட்டத்திலேயிருந்து சின்னசேலத்திற்குத் தண்ணீர் கொண்டு வர இருப்பதாக அறிகிறேன். அது எவ்வளவு விரைவில் முடிக்கப்படும் என்பதைத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : பேரவைத் தலைவரவர்களே, ஒரு இலட்சத்து இருபதாயிரம் ரூபாய் செலவில் ஆய்வில் எடுத்துக்கொண்டிருக்கிறோம். மிக விரைவில் முடிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

*294. வின—

மாயூரம் வட்டத்தில் குடியிருப்பு மனைகள் வழங்கல்.

திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு அரிசன நலத்துறை அமைச்சர்—கீழ்க்கண்ட வினக்களுக்கு விடையளிப்பாரா —